# எத்தியோப்பியா பிரதமருக்கு பெர்டா புத்ராவில் வரவேற்பு

**புத்ராஜெயா, அக். 27-**

**மலேசியாவிற்கு இரண்டு நாள் வருகை மேற்கொண்டுள்ள எத்தியோப்பியா நாட்டின் பிரதமர் டாக்டர் அபி அமாட் அலிக்கு புத்ராஜெயாவில் உள்ள பெர்டாானா புத்ராவில் அதிகாரத்துவ வரவேற்பு அளிக்கப்பட்டது.**

நேற்றுக் காலை 9.30 மணியளவில் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் எத்தியோப்பியா நாட்டின் பிரதமர் டாக்டர் அபி அமாட் அலியை வரவேற்றார். அதன் பின்னர் இரு நாடுகளின் தேசியக் கீதம் இசைக்கப்பட்டன.

அதன் பின்னர் டாக்டர் அபி மலாய் அரசப் படையின் முதலாவது பெத்தாலியனைச் சேர்ந்த 103 பேரின் மரியாதை அணிவகுப்பை ஏற்றுக் கொண்டார்.

கடந்த 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எத்தியோப்பியா



நாட்டின் பிரதமர் பதவியை ஏற்ற அவர், மலேசியாவிற்கு வருகை புரிவது இதுவே முதன் முறையாகும்.

இச்சடங்கில் துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் அமாட் ஸாஹிட் ஹமிடி, முதலீடு, அனைத்துலக வாணிப தொழில்துறை அமைச்சர் தெங்கு டத்தோஸ்ரீ ஸஃப்ருல் அப்துல் அஸிஸ், தூதர்கள், அரசாங்க உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அதன் பின்னர் இரு நாட்டின் பிரதமர்களும் நேருக்கு நேர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இருவழி உறவு உட்பட வட்டார, அனைத்துலக விவகாரங்கள் குறித்தும் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதனைத் தவிர்த்து, வாணிபம், முதலீடு, விவசாயம், மூலப்பொருள், ஹலால் தொழில்துறை, சுகாதாரம், சுற்றுலா, கல்வி ஆகியவை குறித்தும் இவ்விரு தலைவர்களும் கலந்து பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரு நாட்டுத் தலைவர்களும் பின்னர் ஒன்றிணைந்து செய்தியாளர் கூட்டத்தை நடத்துவர்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அபி தனது குழுவினர்களுடன் நேற்றுக் காலை 8.30 மணியளவில் கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

# ரயில் சேவை வழக்க நிலைக்குத் திரும்பியது

புத்ராஜெயா, அக். 27-

தொலைத் தொடர்பு துண்டிப்பால் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணி முதல் கெப்போங் முதல் சுங்கை பூலோ வரைக்குமான மின்சார ரயில், இடிஎஸ் எனப்படும் விரைவு ரயில் சேவை தடைப்பட்ட வேளையில், அது நேற்றுக் காலை வழக்க நிலைக்குத் திரும்பியது.

அதன் சீரமைப்புப் பணிகள் நேற்று பின்னிரவு 3.30 மணிக்கு நிறைவு பெற்றதாக அவர் கேடிஎம்பி நிறுவனம் வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியது.

இதனைத் தொடர்ந்து நேற்று அதிகாலை 3.54 மணியளவில் தடைபட்டிருந்த மேற்கொண்ட ரயில் சேவை மீண்டும் வழக்கம்போல் செயல்பட்டதாக அந்த அறிக்கை கூறியது.

இதன் காரணமாக இடிஎஸ் எனப்படும் விரைவு ரயில் சேவை இரண்டு மணி தாமதமானது. இதனால் தங்களின் பயணத்தைத் தொடர முடியாத தரப்பினர்



அதற்கானப் பணத்தை மீட்டுக் கொள்ளலாம் எனவும் அந்த அறிக்கை கூறியது.

தொலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டதால் கெப்போங் முதல் சுங்கை பூலோ வரைக்குமான ரயில் சேவை பாதிக்கப்பட்டதாகவும் இதனால் மின்சார ரயில் சேவை, இடிஎஸ் எனப்படும் விரைவு ரயில் சேவை, வழக்கமான அட்டவணையைவிட 60 நிமிடங்கள் வரை தாமதமாகும் என கேடிஎம்பி நிறுவனம் கூறியிருந்தது.

# விரைவுப் பேருந்து – கனரக லோரி விபத்து: ஜப்பான் சுற்றுப்பயணி உயிரிழந்தார்



ஈப்போ, அக். 27-

விரைவுப் பேருந்தும் கனரக லோரியும் விபத்துக்குள்ளானதில் ஜப்பான் நாட்டு சுற்றுப்பயணி ஒருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வடக்கு - தெற்கு நெடுஞ்சாலையின் 230.3ஆவது கிலோமீட்டரின் தைப்பிங் அருகே நிகழ்ந்தது.

பலத்த காயங்களுக்குள்ளான 73 வயது நிரம்பிய மூதாட்டி கோலகங்சார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த வேளையில்,நேற்று முன்தினம் இரவு உயிரிழந்ததாக பேராக் மாநில போலீஸ் தலைவர் டத்தோ அஸிஸி மாட் அரிஸ் கூறினார்.

இச்சாலை விபத்தில் அவர் நெஞ்சுப்பகுதியிலும் வயிற்றுப் பகுதியிலும் கடுமையான காயங்களுக்குள்ளாகியதைத் தொடர்ந்து அவர் உயிரிழந்ததாக பிரேதப் பரிசோதனையில் தெரிய வந்ததாக அவர் சொன்னார்.

இதனைத் தொடர்ந்து 41 வயதுடைய அந்த பேருந்து ஓட்டுநர் சிறுநீர் சோதனைக்கு ஆளாகியதாகக் கூறிய அவர், இச்சம்பவம் 1987ஆம் ஆண்டு சாலைப் போக்குவரத்து சட்டத்தின் 41(1) பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் அவர் சொன்னார்.

இச்சம்பவத்தில் அந்த விரைவுப் பேருந்தில் பயணம் செய்த 11 சுற்றுப்பயணிகள் உட்பட 13 பேர் காயமுற்றனர்.

காயமடைந்தவர்களில் 2 பேருந்து ஓட்டுநர்கள், மூன்று ஆடவர்கள் உட்பட 8 ஜப்பான் நாட்டு பெண்களும் அடங்குவதாக தீயணைப்பு - மீட்புப் படையின் பேராக் மாநில உதவி இயக்குநர் சபாரோட்ஸி நோர் அமாட் கூறினார்.


